**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | |
|---|---|
| Case No. | : CC No. 950/2025 |
| Deposition of witness for Prosecution | : P.W– 1 |
| Name | : ராமராஜ், வயது 50 |
| Father Name/Husband Name | : கிருஷ்ணன் |
| Village | : தெற்கு திட்டங்குளம் |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of August 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது தெற்கு திட்டங்குளத்தில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மச்சான். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை 06.10.2025 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் எனது வீட்டின் முன்பு கிழக்கு காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைப்படம் வரைந்து என்னிடமும், எனது பக்கத்து வீட்டான காளீஸ்வரி என்பவரிடமும் சாட்சியாக நாங்கள் இருவரும் கையொப்பம் செய்து கொடுத்தோம். **(அந்த பார்வைமகஜர் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2 இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காளீஸ்வரி என்ன என்று படித்து பார்க்காமல் என் முன்பு

கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் பார்வை மகஜரில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.